ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

ஒருவன் சொல்லுவதைத் தட்டாமல் பலபேர் கேட்டு அதன்படி நடக்கவேண்டுமேயானால் அவன் ஈசுவராம்சம் பொருந்தியவனாயிருப்பானென்பது நியாயமார்க்கத்திலன்றி அநீதிவழியிலில்லை. அனியாயக்காரர்களான ஆஸுரராக்ஷஸப்பிரகிருதிகளின் சொற்படி அம்மாதிரி ஸ்வபாவமுள்ள பலர் கேட்டு நடந்தாலும் அவர்களை ஈசுவராம்சம் பொருந்தியவர்களெனக் கூறுவதில்லை. பணத்திற்காகவோ பலத்திற்காகவோ சக்திக்காகவோ செல்வாக்குக்காகவோ கட்டுப்பட்டு பலபேர் ஒருவன்கீழ்படிந்து நடந்துவந்தாலும் அத்தகைய பணக்காரர் முதலியோரைப் பகவானது அம்சம் வாய்ந்தவராகவும் வழங்குவதில்லை. பகவான் தனது விபூதிகளைப் பற்றிச் சொல்லும்பொழுது—"பலசாலிகளின் பலமாயிருக்கிறேன். ஆனால் காமாதிகள் விலகிய பலமாயிருப்பேனேயல்லது காமாதிகள் கலந்த பலமாயிருக்கமாட்டேன்" என்றார். இதனால் பணமோ, பலமோ எவையாயினும் காமாதிகள் கலந்ததாயிருக்குமானால் அவை பகவானது விபூதிகள் அல்லவென்றேற்படுகின்றது. ஆகவே தற்காலத்தில் பொதுக்கார்யத்திற்குழைப்பதென்ற வெளிப்பெயரைப் பலமாக வைத்துக்கொண்டு அந்தரங்கத்தில் சுயநலத்திலேயே நோக்கங்கொண்ட பலரைச் சேர்த்துக்கொண்டு பலவிடம் சென்று பாமரர்களை ஏமாற்றிப் பணத்தைப்பிடுங்கிப் பிழைப்பவர்களெல்லாம் பொதுநலத்திற்குண்மையில் உழைப்பவரல்ல. சாஸ்திர சம்பிரதாயத்திற்கு விபரீதமாயில்லாமல் பிரவிருத்திசெய்வார்களானால் பணம், காசு, பலம், பேச்சு முதலியதொன்றுமில்லாவிடினும் அவர்களே பெரியோர்களெனப் புகழப்படுவார்கள். அவர்கள் சொல்லும் தத்துவத்தையுணர்ந்து க்ஷேமத்தையடையவேண்டுமென்ற நோக்கம் ஓர்புறமிருக்கும்பொழுது பெரும்பாலும் பொதுஜனங்கள் புது இயக்கமொன்றிலீடுபட்டு உடல் பொருள் ஆவி முழுவதையும் அதற்காகவே விநியோகப்படுத்தி மேன்மையடையவேண்டுவதான உருதியைக்கிரியையால் காட்டிவருகிறார்கள். பெரும்பாலும் தற்காலத்தியவர்களுக்கு அதிருஷ்டபலனைவிட திருஷ்டபலனே பெரிதாகத் தோன்றுகிறது. ஆயினும் அது உண்மையல்லவென்பதைப் பெரியோர் சொல்லாமலிருக்கமுடியாது. ஒருவன் கேட்டாலும் கேழ்க்காவிட்டாலும் உள்ளதை உள்ளபடி சொல்லுவதே ஸாத்துவிகர்களின் ஸ்வபாவமானபடியால் அப்படி அவர்கள் சொல்லுவது உசிதந்தான். இதற்காக திருஷ்டகாரியங்களை விட்டுப்போடவேண்டுமென்று கருத்தல்ல. ஆனால் அதிருஷ்டபலன்களுக்கு விரோதப்படாமல் செய்யவேண்டிய கார்யங்களைச் செய்யவேண்டுமென்பது அப்பெரியோரது கருத்தாகும். அதனால் தர்மமார்க்கத்திற்கு மாறுதலாக நடப்பவர்கள் அந்த நடத்தையினின்று திருத்தப்பட்டு தர்மாபிமுகமாகக் கொண்டுவரப்படுவார்கள். ஆங்கே நிலைத்திருந்து யாவரும் ஸ்ரேயஸ்ஸையடைவார்களாக.

சுபம்.

பத்திராதிபர்.

உ

# ஆர்ய தர்மம்.

பிரமோதூத-௵ சித்திரை-மீ ௧௨௨

## அவதார புருஷர்கள்.

ஸ்ரீ ராமபிரான் ராஜ்யபாரம் செய்தகாலத்தில் நான்கு வர்ணத்தவர்கள் சரிவரத்தத்தம் தர்மங்களையனுஷ்டித்து வந்தார்களாம். அதிலும் க்ஷத்திரியகளெல்லோரும் பிராமணர்களை எவ்விஷயத்திலும் முதன்மையாக வைத்துக்கொண்டு ராஜ்யத்தை நடத்தி வந்தார்களாம். வைசியர்கள் க்ஷத்திரியர்களைப் பின்பற்றி நடந்து வந்தார்களாம். மற்றவர்கள் மூவரையுமனுஸரித்து வந்தார்களாம். சரீரத்தின் அங்காவயவங்களுள் அததற்குத் தகுந்தபடி ஏற்றத் தாழ்வு ஒருவாறிருப்பினும், சரீரயாத்திரை நடப்பதில்ஒன்றோடொன்று முரண்படாமல் ஒற்றுமைப்பட்டு அவைகள் நடந்து கொண்டு சரீரம் சுகமாய் வாழும்படி செய்வதுபோல் இப்பிரபஞ்சமென்னும் சரீரத்திற்கு அவயவங்களாக நிற்கும் ப்ரம்ம க்ஷத்திராதிவர்ணத்தார்களும் தங்களுக்குள் ஈசுவரனால் ஸிருஷ்டியிலேயே, அமைக்கப் பட்டதாகச் சுருதிகளாற் கூறப்படும் உயர்வுதாழ்வு ஒருவாறுயிருப்பினும், பிரபஞ்சகாரியத்திற்கு யாதொரு கெடுதியும் வாராதபடி ஒற்றுமையாயிருந்து உலகம் ஒன்றுபட்டு சுகமாய் வாழும்படி ஏற்பாடு செய்து வந்தார்கள். தற்காலத்திற்போல, "உன்னைத் தாழ்த்தினர்— தன்னைத்தூக்கினர்" என்பதாதி விகற்பங்களை அறியாப்பிராணிகளிடத்தில் அதீதிகாரமாகப் போதித்தார்களில்லை. அசுவபதியென்னும் கேகயமஹாராஜன் ராஜ்யம் நடத்திவந்த காலத்தில் தன் அரண்மனையை நாடிவந்த ஆறுமஹரிஷிகளைத் தான் செய்யப்போகும் யாகத்திற்கு இருக்கவேணுமென்று பிரார்த்திக்க, அதைக்கேட்டு அவர்கள் யோஜனை செய்யவே, அரசன் இவர்கள் தன்னை யோக்கியனாக மதிக்கவில்லையோ என்றெண்ணி தான் ராஜ்யம் நடத்திவரும் வாலாற்றை யெடுத்துரைக்குப்பொழுது "பெரியோர்களே! எனது ராஜயத்தில் திருடன்

கிடையாது. லோபி கிடையாது. வஞ்சகன் கிடையாது. ஆஹிதாக்னியல்லாத அந்தணன் கிடையாது. அவித்துவானுக யாருமில்லை (சாஸ்திரத்திற்குக் கட்டுப்படாமல்) தன்கொண்டியாகத் திரிகிறவன் கிடையாது. அப்படியிருக்கையில் சுதந்திரமாயிருக்கவேணுமென்று நினைக்கும் ஸ்திரீ எங்கே இருக்கப்போகிருள்" என்று ராஜ்யம் நடத்தவேண்டிய முறையைக் காட்டுகிருர். க்ஷத்திரிய பரம்பரையில் ராஜ்யமிருந்தவரையிலும் சாஸ்திரஸம்பிரதாயம் மாருமலேயிருந்துவந்தது. அன்னியர் கைவசப்பட்டதிலிருந்து அவர்கள் அர்த்தபரர்களாய்விடவே வர்ணுச்ரமதர்மம் வாடிநின்றது. பௌத்தர்கள் பிராணிகளுக்கு புத்திபேதமுண்டாக்கவே பரமேசுவானே பகவத்பாதாசார்யரூபமாயவதரித்து, வாடிய வர்ணுச்ரமதர்மம் தழைத்தோங்கும்படி செய்தார். அந்தப்பிரவாஹந்தான் இன்றுவரை ஓடிக்கொண்டுவருகிறது. அதையுமழிக்க அனேகர் முயலுகின்றனர். அது அழிந்தால் அனைத்துமழிந்துவிடும், ஆகையால் தர்மத்தை நிலைநாட்டியவர்களை வருஷந்தோறும்நினைத்துக்கொண்டு அவர்கள் அவதரித்த திதிநக்ஷத்திராதிகள் விரதம் அனுஷ்டித்தும் பண்டிகைகொண்டாடி அவர்களது திவ்யசரித்திரத்தைப்படித்துப் போதிப்பித்து பிராசீனவழக்கத்தைச் சில மஹான்களாவது ஆதரித்துவருகிருர்கள். அதில் ஸமீபத்தில் ஸ்ரீராமநவமி மஹோத்ஸவம் பலவிடங்களில் கொண்டாடப்பட்டு வந்தது யாவருமனுபவித்த விஷயமே அதுபோலவே ஸமீபத்தில் பகவத்பாதாசாரியாளுடைய அவதாரமஹோத்ஸவ திதி வரப்போகிறது. அதில் அந்த மஹோத்ஸவத்தை எங்கும் கொண்டாடி யாவரும் ஆசார்யபாதாளுடைய பரமசித்தாந்தத்தை நன்றாகத் தெரிந்துகொண்டு அவரவர்களது அதிகாரத்திற்குத் தக்கவாறு கர்மயோகம் முதலியவற்றைக் கைப்பிடித்து துராசாரத்தைக் கனவிலும் நினைக்காமல் நீடூழிவாழ்ந்து நித்யபுருஷார்த்தத்தை அடைவாராக.

பத்திராதிபர்.

# பெண் கல்வி.

(148-வது பக்கத்தொடர்ச்சி)

இனி இதற்கும் உபநிஷத்ப்ரமாணம் காட்டுகின்றேன். பிருகதாரண்யகம் 6வது அத்தியாயத்தில் "எவனொருவன் என் பெண் பண்டிதையாக ஆகவேண்டுமென்று விரும்புவானோ" என்று மந்திரமிருக்கிறது. இதற்குப் பரமாசார்யர்களின் பாஷ்யம்—

दुहितुः पाण्डित्यं गृहतन्त्रविषयमेव वेदे अनधिकारात् ।

பெண்ணுக்குப் பாண்டித்தியமென்றால் வீட்டுவிஷயமாகத்தான். வேதத்தில் அதிகாரமில்லாததால் என்கிறார். ஆகவே ஸ்திரீகளுக்கு வேதம்கற்க அதிகாரமே இல்லையென்பதற்குத்தான் பிரமாணமிருக்கிறது. இன்னோர் பிரமாணமும் இங்கு கூறுகின்றேன். நமது விவாகப் பிரகாணத்தில் பொறி இடுதல் என்றவிடத்தில் இதுதான் முக்கியம். அங்கு ஸ்திரீயானவள் அக்னியைப் பிரார்த்தித்து அவள் கையால் பொறியை அக்னியில் ஹோமம் செய்கிறாள். ஆனால் வேதமந்திரத்தை அவள் உச்சரிப்பதற்கு அதிகாரியல்லவாதலால் நேராகவே அவள் அக்னியை ஹவிஸ்ஸால் பூர்த்தி செய்யக்கூடாதுபற்றியும் வரன் அவளது இருகாங்கலையும் பற்றி முதலில் ஆஜ்யத்தால் சுத்தம்செய்து அதில் அவள் ஸஹோதரன் மூலம் பொறியை நிரப்பிக்கொண்டதும் வரன் சொல்லுகின்ற மந்திரத்தின் கருத்து இது—

> "அக்னியில் பொறியை இறைத்துக்கொண்டு இந்த ஸ்திரீ கூறுவதாவது. இவளது புருஷன் எவனோ அவன் 100 வருடங்கள் ஜீவிக்கவேண்டும்" என்று

ஆகவே வேதாதிகாரம் இல்லவே இல்லை.

பிறகு இங்கு ஆச்சார் இன்னொரு சமத்காரம் செய்கிறார். அதாவது ஸ்திரீகள் புருஷர்கள்போல் எல்லாவித்தையையும் கற்கலாமாயினும் அவரவர்கள் அபிலாஷைக்குத் தகுந்தவித்தையைத் தான் கற்றுக்கொள்ளுகிறார்களென்று அடிப்போட்டுக்கொண்டு கைகேயி முன்சமயம் தேவாஸுரயுத்தத்தில் ஸாரத்தியம் செய்யும் வித்தையால் தசரதரைக்காப்பாற்றினாள் என்ற ஞாபகம் வந்துவிட்டதை வைத்துக்கொண்டு அவரவர்கள் அந்தந்தவித்தையைத்

தான் கற்றுக்கொள்வார்கள். பொழுதுவிடிந்தால் பொழுதுசாய்ந் தால் அனலைவளர்த்து அவிஸ்ஸைச் சொறிந்துகொண்டிருக்கின்ற ஒரு யக்ஞபத்னியான பிராமணிக்குப் பயன்படுவதாகுமோவென் கிறார். இது ஆலமரம் தெரியுமோவென்று கேட்டதற்குத் தெரி யும் வேலிமுழுவதும் புளியமரம்போல் படர்ந்திருக்குமென்பது போலிருக்கிறது. க்ஷத்திரியஸ்திரீகளிற் சிலர் சில ஸாமர்த்தியம் உள்ளவர்களாய் இருக்கலாம். இதை வைத்துக்கொண்டு அவர் அவர்களுக்கு இஷ்டமான கலைகளைத்தான் கற்றார்களென்று சொல்வானேன். அனலைவளர்த்து அவிஸைச் சொரியும் யக்ஞ பத்னியான பிராமணிக்கு இது எதற்கு என்கிறார். யக்ஞபத்னி என்றால் பிராமணிதானே! க்ஷத்திரியஸ்திரீ வைச்யஸ்திரீ என்று ஆகாதோ. அனலைவளர்ப்பது அவள் கார்யமாகலாம். அவிஸைச் சொரிவதும் அவள் கார்யமாகுமோ? ஆகவே ஸம்பிரதாயதர்மம் யாதொன்றுமே தெரியவில்லையென்பது வெளியாகும்போலிருக் கிறது.

பிறகு ஸ்திரீகள் கல்விகற்க புருஷனைப்போல் வெளியில் போ கக்கூடாது. தகப்பன், சிற்றப்பன், அண்ணன், தம்பி முதலான பொறுப்புள்ளவரிடத்தில் வீட்டிலிருந்துகொண்டே படித்து அபி விருத்தியடையவேண்டுமென்று சொல்லப்படுகிறதாய் நம்ஆச்சார் ஒப்புக்கொண்டு அதற்கு ஆதாரமாய்,

पिता पितृव्यो भ्रातावा नैनामध्यापयेत्परः ।

என்ற சுலோகத்தின் பாதியைப் பிரமாணமாய்க் கொடுக்கிறார். இங்கும் கேட்கவேண்டியதிருக்கிறது. ஆச்சார் வர்ணாச்ரமத்தை ஒப்புக்கொண்டிருக்கிறாரென்றுதான் தெரிகிறது. ஆகவே பிரா மணஸ்திரீ பிராமணனுக்கு யோக்கியமான வித்தையையும் க்ஷத் திரியஸ்திரீ அவனுக்குத் தகுந்த வித்தையையும் இவ்விதமேமற்ற வர்களும் கற்றுக்கொள்வார்கள். பிர்ம்மவித்தைமட்டிலும் எவ் விதம் எல்லா ஸ்திரீயும் கற்றுக்கொள்ளமுடியும்? அவளது தகப் பன்முதலியவர்கள் பிர்ம்மவித்தையில் பயிற்சிபெற்றிருந்தாலல்ல வோ அவளுக்கும் அது உதவும். மற்றும் புருஷனைப்போல் ஸ்திரீ க்கும் வித்தை பொதுவென்றால் இவளுக்கு வம்சத்தில் தகப்பன் முதலிய ஒருவரும் இல்லாமற்போனால் எங்குபோய் வித்தைகற் பாள்? ஜபாலையின் பிள்ளை ஒருவருமில்லாததால் ஹாரித்ரும

கௌதமரிடம் போய் உபனயனம் பெற்றுரென்றிருக்கிறது. அது
போல் ஸ்திரீகளுக்கும் வித்தை பொதுவென்றிருந்தால் அவர்
களுக்கும் ஓர் வழி விட்டிருப்பார். இன்னென்று புருஷர்களுக்
கும் ஸ்திரீகளுக்கும் வித்தை ஸமமாய் இருக்கும்போது இவளை
யும் என் குருகுலம் போய்க்கற்கவேண்டாமென்று தடுத்தார்கள்?
இதனுல் ஸ்திரீகள் புருஷஸன்னிதியில் கூடினுல் கெட்டுவிடுவாள்
என்று எண்ணம்கொண்டதாய் ஆகவில்லையா? மற்றும் தந்தை
முதலானவர்களிடமிருந்து எவ்வளவு வித்தையைக் கற்றுவிட
லாம்? ஆகவே அவ்வித்தை கிருஹத்திற்கு வேண்டியபடி புத்தி
மதிதானென்றேற்படுகிறது. இதையேதான் ஆச்சார் சொன்ன
சுலோகமும் வற்புறுத்துகிறது. "नैना मध्यापयेत्परः"
இவர்களைத்தவிர வேறொருவரும் ஸ்திரீகளுக்குக் கற்பிக்கக்கூடா
தென்கிறார். இவர் இந்த சுலோகத்தைத் தன் சாதகத்திற்கு
வேண்டிய பாகியைமட்டிலும் எடுத்துக்கொண்டார். இது
மனுஸ்மிருதியிலுள்ளது. இதன் பிரகரணத்தையும் இதன் முன்
பின் சுலோகத்தின் கருத்தையும் சற்று கவனித்திருந்தால், ஆச்
சார் இவ்வழி நடந்திருக்கமாட்டாரென்று நினைக்க இடமேற்படு
கிறது. அங்குள்ள சுலோகங்களின் கருத்தையே விளக்கு
கின்றேன்.

இது ஸ்திரீகளின் விவாகப்பிரகரணத்திலுள்ளது. விவாக
காலம் எப்போது என்று விசாரித்துப் புருஷர்களின் உபனயன
ஸ்தானத்தில்தான் விவாகமென்றும், ஆகவே ஸ்திரீகளுக்கு உப
னயனஸ்தானத்தில்தான் விவாகம் என்று சொன்னதால் அவர்
கள் குருகுலவாஸம் செய்வதும் அக்னிபரிசர்யை செய்வதும்
பிக்ஷாடனம் செய்வதும் வேண்டாமோ என்று சங்கை நிகழ,
அப்போது குருகுலவாஸமென்பது பதிஸேவை செய்வதுதான்.
வீட்டுக்காரியம் செய்வதுதான் அக்னிபரிசர்யை. தன் குலத்தில்
சாப்பிடுவதுதான் பிக்ஷாசர்யமென்றும் கூறி, இதையும் சொல்
கிறது. ஆகவே ஸ்பஷ்டமாய்க் கவனிக்குமிடத்தில் ஸ்திரீகள்
பாடசாலையில் படிப்பதில்லையென்பதுமட்டுமல்லாமல் அவர்கள்
புஸ்தகமெடுத்து சாஸ்திரப்படிப்புப் படிக்கவேயில்லையென்றும்
தாராளமாய்க்கூறலாம். ஆனுல் அநேக ஸ்திரீகள் படித்திருப்ப
தாய்த் தெரிகிறதே எனலாம். ஓரிடத்திலும் தெரியவில்லை.
இரண்டொருவரைமட்டிலும் குறிப்பிட்டால் அவர்கள் சாஸ்திரத்

திற்கு விரோதமாய்ப் படித்திருக்கவேமாட்டார்கள். கேழ்வியின் பரிச்சயத்தால் அவர்கள் பேசுவார்கள். ஸீதைபோன்ற பெண் மணிகளோவெனில் படிக்கவே இல்லையென்பது வெளிப்படை. ஸீதை 6வது வயதிலேயே விவாகஸம்ஸ்காரம்பெற்று உடனே ராமருடன் அயோத்திக்கு வந்துவிட்டதாய்த்தான் தெரிகிறது. திரௌபதி தன் பர்த்தாக்களுடன் காட்டில் வசிக்கும்போது இவ் விதம் தர்மபுத்திரரிடம் கூறுகின்றாள்.

भवादृशेषु प्रमदाजनोदितं भवत्यधिक्षेप इवानुशासनम् ।
तथापि वक्तुं व्यवसाययन्ति मां निरस्तनारीसमया दुराधयः ॥

தங்களைப்போலொத்தவர்களிடத்தில் ஸ்திரீகள் பேசுவதென்பது கெட்டகட்டளைபோலாகும். ஆனாலும் என் அடங்காமனோவ்யாதி யானது ஸ்திரீகளின்வரம்பைக்கடந்து என்னைப்பேசும்படி தூண்டு கிறது என்கிறாள். இதனால் புருஷனிடத்தில் ஸ்திரீகள் இருக்க வேண்டிய மரியாதை வேறுதானெனன்பது விளங்கவில்லையா. இத னாலும் இவள் படித்துப்பேசினளென்று எவ்விதம் கூறிவிடமுடி யும்? மற்றோர் சமயத்தில் அதிகதுக்கத்தில் தர்மபுத்திராதிகள் மூழ்கியிருக்கும்போது திரௌபதி வேதாந்தவிஷயமாய்த் துக்கத் தைமாற்ற அனேக நன்மொழிகள்கூற அப்போது தர்மபுத்திரர் திகைத்து நீ இவ்வளவுதூரம் யாரிடம்கற்றாய் என்று வினவினர். அப்போது திரௌபதி இவ்வாறு கூறுகின்றனள். பிரியநாயகனே நான் யாரிடம் எவ்விதம் கற்பேன். யான் குழந்தைப் பருவத்தில் பிரியத்துடன் என் தந்தைமடியில் அனவரதம் புரண்டுகொண்டி ருப்பேன். அப்போதப்போது என் தகப்பனைக்காணவரும் சாதுக் கள் சொல்லும் வாக்கியங்களைக் காதுகொடுத்துக் கேட்பேன். அக்கேழ்வியின் ஞாபகம் அன்றுமுதல் என்றுமே என் மனதில் துக்கஸமயத்தில் உதிக்கும். அதையே கூறினேனென்று. இவ் வபிப்ராயங்களை வைத்துக்கொண்டுதான் காளிதாஸனும்—

स्त्रीणामशिक्षितपटुत्वममानुषीषु संदृश्यते ।

ஸ்திரீகளுக்குப் படிப்பில்லாமலே சாமர்த்தியமென்பது பக்ஷி மிருகங்களிற்கூட காணக்கிடக்கின்றதே என்றார். மற்றொரு கவியும்

स्त्रियो हिनाम खल्वेता निसर्गादेव पण्डिताः ।
पुरुषाणान्तु पाण्डित्यं शास्त्रैरेवोपदिश्यते ॥

ஸ்திரீகள் என்ற வியக்திகள் இயற்கையிலேயே பண்டிதைகள். புருஷர்களுக்கோவெனில் சாஸ்திரங்களால்தான் உபதேசிக்கப் படுகிறதென்கிறார். வீணில் வளர்ப்பானேன், நம் ஆச்சார் சொல்வதற்கொப்ப அவருக்கு ஆதாரமாக ஒரு துணுக்குக்கூடக்கிடைக்காது. ஆச்சார் இங்கு ஓர் சங்கை கிளப்பிக்கொண்டு அதற்கு சமாதானத்தில் நம் முன்னோர்களைத்திட்டாமல் கூறுகின்றாரென்ற பெருமையை இங்கு கவனிக்கலாம். உலகத்தில் யாவரையும் சரிசமமாய் பார்க்கும் பெரியோர்கள் இந்த ஸ்திரீவித்தைவிஷயத்தில்மட்டும் என் வெளியிற்போய்க் கற்கும்படி விடவில்லை? அவர்களுக்கு ஸ்திரீகள் படிக்கக்கூடாதென்ற எண்ணமோவெனில் இல்லை. பரமகருணாமூர்த்திகளான நம்முன்னோர்கள் புருஷர்களின் அடங்காக்காமத்தை ஞானதிருஷ்டியால் கண்டு ஸ்திரீகள் வெளியிற்சென்று படித்தால் அவர்களின் கற்பு நிலைதவறிவிடுமென்றும் அதனால் உலகில்பல அனர்த்தம் நிகழ்ந்துவிடுமென்று நிச்சயித்துத் தான் இவ்வித வரம்பை ஏற்படுத்தினார்களேதவிற வேறல்லஎன்று 2-வது வியாஸத்தை முடித்துவிட்டார். இதையும் கவனிப்பாம்.

இங்கு நம் ஆச்சார் சொல்கிறபடி முற்காலத்திய மகரிஷிகள் நினைக்கவேஇல்லை என்பதற்கு இரண்டு உபாக்கியானம் சுருங்கக் கூறுகின்றேன்.

பிருகஸ்பதியின் புத்திரன் கசன் என்பவன் சுக்கிராசாரியரிடம் போய் இறந்தவனைப்பிழைக்கச்செய்யும் வித்தையைக்கற்கப் போயிருந்தான். அங்கு அவரது புதல்வியான தேவயானியின் பலவித உதவியால்தான் அவனுக்கு அவ்வித்தை கிடைக்கலாயிற்று. அதுவனாயினும் அவ்விருவரும் இருந்த நேசபாவத்தை அளவிடமுடியாது. முடிவில் கசன் குருவினிடமிருந்து விடைபெற்றுச்செல்ல ஆரம்பிக்கும்போது பலவிதமாய் மறைபொருளாயும் கடைசியில் வெளிப்படையாயும் தன்னை மணக்கச்சொல்லி வற்புறுத்தலாரம்பித்தாள். அவன் தன் தகப்பனிடம் வந்தது முதல் இவனையே நான் மணப்பேன் என்று தீர்மானம் கொண்டனள் தேவயானி. நாளுக்குநாள் இவளது நிகரிலா அன்பைப் பார்த்து நம் சகோதரி இவளெனவெண்ணினன் கசன். இறுதியில் அவன் கொண்ட எண்ணத்தோடேயே போய்விட்டனன். ஓர் உபாத்தியாயரிடத்தில் குருகுலவாசம் செய்துகொண்டிருந்த ஒரு சிடனைப்பார்த்து தன் அவசியமான காரியத்தைமுன்னிட்டு

தேசாந்தரம்போகவாரம்பிக்கும்போது அச்சிடனை நோக்கி அப்பா நான் தேசாந்தரம் போய்வருகிறேன். நான் வருமளவும் வீட்டில் என் ஸ்தானத்திலேயே இருந்துகொண்டு நான் செய்வதையெல்லாம் நீ செய்துவருவாயாக என்று கட்டளையிட்டுப்போனார். பிறகு ஒருநாள் குருபத்னி மாதவிடாய் கழித்து முழுகினதினம் இரவில் அச்சிடனை அண்டி "இன்று ருதுஸ்னானதினமாயிற்று. இன்று பர்த்தாவோடு கூடுதல் மிக விசேஷமென்று சாஸ்திரங்களினபிப்பிராயமென்பது தங்களுக்குத் தெரிந்ததே. தாங்களே இப்போது என் ஆசைக்கணவன் ஸ்தானத்திலிருப்பதால் குருவின் ஆணைப்படி என் மனோபிஷ்டத்தைப் பூர்த்திசெய்யவேண்டும்' என்று பலவிதமாய் மன்றாடியும், "இக்காரியம் மிகக் கெட்டது. ஆகவே இதைச் செய்யவேண்டுமென்று என் ஆசானின் ஆணையல்ல"வென்று தடுத்துவிட்டுப் பிறகு குரு வந்ததும் இதைத் தெரிவித்துப்பரமஅனுக்கிரகம் பெற்றுமனனாயிருக்கிறது. இவ்விரு கதைகளாலும் நம்முன்னோர்கள் ஸ்திரீகளும் புருஷர்களும் சேர்ந்து பழகினால் புருஷன் கெடுத்துவிடுவானென்று எண்ணவேயில்லை. இதைப்போல் பல கதைகளிருக்கின்றன. ஆகவே இவைகளையறியாமல் நம் ஆச்சார் முன்னோர்களுக்குக் கௌரவம் வைக்கக் காடுமலை சுற்ற வேண்டாமென்று தோன்றுகிறார். சாஸ்திரஆராய்ச்சி உபனிடதஆராய்ச்சி மிக்கப்பெற்ற இவர் சற்று ஆஅமர நிதானித்தால் ஸ்திரீகளுக்குப் படிப்பில்லை என்ற ஸித்தாந்தத்திற்கே வந்துவிடுவாரென்று நினைக்கிறேன். இனி 3வது வியாஸத்தில் இறங்குவாம்.

இதில் முழுவதிலும் நாம் ஆராய்ந்தமட்டில் ஆச்சார் சாஸ்திரரீதியில் நிதானம் தவறாது பேசியிருப்பதோடு இப்போது தலைவிரித்தாடும் ஸ்திரீஸ்வாதந்திரியப்போரில் வரம்பின்றிப் பேசித்திரியும் ஸ்திரீகளையும் சற்று சூடு கொடுத்து விவாகம் அவசியமென்றும் அதில் ஸ்திரீயின் காரியம் வேறு, புருஷனின் காரியம் வேறுதான். அவரவர் காரியத்தை அவரவர் செய்வதில் ஒருவரும் ஏற்றத்தாழ்வு கிடையாதென்றும் முடித்துவிட்டார். இனி 4-வது வியாஸத்தையடைவோம்.

இவ்வியாஸத்தின் ஆரம்பத்தில் பதிபத்னிகளுக்குப்பிரதிநிதியுமில்லை என்றால் பதியில்லாதிருக்கையில் பிறரொருவரை அந்த ஸ்தானத்தில் பத்னி வைத்துக்கொள்ளவோ பத்னி இல்லாதிருக்

கையில் பிறமாதரொருவரை அந்த ஸ்தானத்திற்கு பதி யமர்த்திக்
கொள்ளவோ நியாயமுமில்லை, பாத்தியமுமில்லை என்கிறார். இது
அவ்வளவு அழகாய் இல்லை. பதி இல்லாததற்காக பத்னிக்குப்
பிரதிநிதி வேண்டாம் அவளுக்கு ஸ்வாதந்திரியமான கர்மானுஷ்
டானம் கிடையாது. உதாரணமாய்ப் பதி இறந்தபிறகு யக்ஞா
னுஷ்டானம் செய்வோமென்று ஸ்திரீகள் வேறு புருஷனையடைய
வழியுண்டோ? பத்னி இறந்துபோனால் புருஷன் மறுஸ்திரீயை
மணந்து சகல கார்யங்களையும் செய்ய பாத்தியமுடையவனாய்
இருக்கிறான். பத்னி இருந்தபோதே ஸ்ரீராமர் ஸ்வர்ணஸீதாப்
பிரதிபிம்பம் வைத்து யாகம்செய்தாரென்றிருக்கிறது. இப்படிக்கு
ஒரு ஸ்திரீ புருஷனுக்குப்பிறகு வேறு புருஷனையடைந்ததாக
எங்கேயாவது உபாக்கியானம் உண்டா? ஆகவே இவரது முன்
னுரை அர்த்தமுள்ளதாய்க் காணப்படவில்லை. பிறகு புருஷன்
வலிமை உள்ளவனாய் இருப்பதால் அவனுக்குத் தகுந்த கன்மா
செய்தபோதிலும் பலன் இருவருக்கும் ஒரேமாதிரிதான் என்று
மீமாம்ஸையில் அதிகாராத்தியாயத்திலிருக்கிறதென்று சொல்லி
அதற்கு இந்த உதாரணத்தையும் காட்டியிருக்கிறார். ஒரு புரு
ஷன் பயிரை சிரமப்பட்டு உண்டுபண்ணி பிறகு வளர்த்து கதிர்
அறுத்து அடித்து சலித்து அளந்துகட்டி வீடு சேர்த்து குத்தி
அரிசியாக்கினதை குந்தி உட்கார்ந்திருக்கும் பெண்மணி அதை
உலையிலிட்டு பக்குவபபடுத்தி இருவரும் புசித்து ஆனந்தத்தை
அடைகிறார்கள். ஆனந்தம் இங்கு இருவருக்கும் சமம், ஆயி
னும் பாடு அதிகம் புருஷனுக்குத்தான் என்று இத்தியாதி பல
உதாரணங்களைக் கூறும் நம் ஆச்சார் தனக்கு ஸாதகத்தைக்காட்
டிக் கொள்ளவில்லை. இது எங்களுக்குத்தான் ஸாதகம். இதனால்
புருஷன் வெளியில் போய்க்கஷ்டப்படுவதற்குத் தக்கபடியும் ஜன
ங்களுடன் பழகி காரியத்தை முடித்து வருவதற்கும் அவனுக்கு
வித்தை வேறுதான். வீட்டிற்குள் உட்கார்ந்திருக்கும் ஸ்திரீக்கு
இப்படிப்பில் அவசியமே இல்லை என்று ஆச்சார் பிரமாணத்தாலே
யே ஏற்படுகிறது. இனி சாஸ்திரமறியாமல் லோகோத்தாரணம்
என்று சொல்லிக்கொண்டு ஓலமிடுபவர்கள் போல் சாஸ்திரம்கற்ற
ஆச்சார்யரும் இதைக் கூறுகிறார். புருஷர்களுக்குத் தக்கபடி
ஸ்திரீகளும் கலாக்ஞானம்பெற்று உதவலாயினர்என்று சொல்லி
ஜானகி, த்ரௌபதி, கைகேயி ருக்மணி போன்றவர்களை இங்கு

உதாஹரிக்கலாமென்கிறார். இவர்கள் எந்த ஸ்கூல்களில் எந்த உபாத்தியாயரிடத்தில் கற்றார்களென்று காட்டவில்லை. பிறகு அத்யாத்ம வித்தையில் கார்க்கி, மைத்ரேயி, சாண்டிலி, சுலபை முதலிய ஸ்திரீரத்னங்கள் என்று பிரமாணமற்ற பாட்டைப்பாடு கிறார். இனி யாக்ஞவல்கிய ஸ்மிருதிக்கு மிதாக்ஷரிக்கு பாலம்பட்டீயம் என்று ஒருவியாக்கியானம் இருக்கிறதாம்.

அவ்வசன நடையைப் பார்த்தால் தர்க்க வியாகரணாதி சாஸ்திரபாரங்கதர் அதை இயற்றியிருக்கிறரென்று விளங்குமாம். அதை இயற்றியவர் லக்ஷ்மி என்ற ஸ்திரீயாம் இதை இவ் வியாக்கியான ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறளாம். ஆகவே ஸ்திரீகள் படிக்கலாமென்று முடிவு கூறுகிறார். இது ஒரு வாறு இருக்கலாம். இவ்விதம் ஒன்றிரண்டு ஸ்திரீகள் படித்தார் களென்பதைக் கொண்டு ஸ்திரீகளுக்கு படிப்புசாமான்யமாய் உண்டு என்று சொல்லிவிடுவதா? அவர்களும் புருஷனிடத்தில் எத்தகைய பக்தி சிரத்தையுடனிருந்தார்களென்பதை ஆச்சாரே விஸ்தரித்துவிட்டார். இக்காலத்திய ஸ்திரீகள் அவ்விதம் அடங்கி னவர்கள்தானென்று ஆச்சார்எண்ணமோ? ஏதோ இந்த ஒரு ஸ்திரீயின் படிப்பைக் கொண்டு பழமையான ரிஷிகாலத்திற்கு வெகு தூரம் பிந்தியகாளிற்கூட நமது தேசத்தில் ஸர்வவித்யாபா ரங்கதைகளான பெண்மணிகள் விளங்கிவந்ததற்கிதைவிட வேறு சாக்ஷி என்னவேண்டுமென்கிறார். ஒரு சாக்ஷியால் தீர்ப்புக்கூறும் ஜட்ஜ் கிடையாதுஎன்று சொல்வோம்.

பிறகு ஆச்சார் சாஸ்திரங்களைக்கட்டி எறிந்துவிட்டு சீர்திரு த்தக்காரர்கள்பேச்சைப்பிடித்துக்கொண்டனர். ஸ்திரீகள் விவாக மில்லாமலே இருந்தார்களாம். பிறகு புருஷர்கள்போக்கிரித்தனம் செய்ய காலம் வந்துவிட்டதாம். உடனே சாஸ்திரமென்று பெய ரை வைத்து விவாஹம் என்றும் அதிலும் ஸ்திரீகளுக்குக் கட்டா யம் என்றும் வைத்துவிட்டார்களாம். வேதங்களுக்கு ஆபுலைக் கல்பித்து சாஸ்திரங்களுக்கு யுக்தியை புத்திப்போக்குக்குத் தக்க வாறுகூறுபவர்களுக்கு இங்கு பதில் கூறுவது விரியுமாயினும்ஆஸ் திகர்கள்இக்கூற்றை ஏற்கமாட்டார்களென்றுமட்டிலும் கூறலாம். ஏனெனில் யுக்திவாதப்படி இது நிலைபெறாது. எக்காலமாரம்பித்து எவர்கள் காலபரியந்தம் புருஷர்களோ ஸ்திரீகளோ கட்டுப்பட்டு இருந்தார்கள். புருஷர்களுக்கு ஏற்பட்டிருந்த ஸ்வதந்திரத்தை

துஷ்பிரயோகம் செய்ய ஆரம்பித்தனர். அதைப்பரிமுதல் செய்ய வேண்டுமென்கிறார். அவர்களுக்கு ஸ்வதந்திரம் யார் கொடுத்தது யார் பறிமுறி முதல் செய்தது. மிதாக்ஷரி வியாக்கியானம்செய்த லக்ஷ்மியம்மாள் காலத்தில் விவாஹம் ஸ்திரிகளுக்குக் கட்டாயம் செய்யவேண்டுமென்று வருத்தி ஏற்பட்டிருந்ததாய் அதிலேயே தெரிகிறதே. அப்போது வெகு காலத்திற்கே முன்னேயே அனுஷ்டித்தமாய் இருப்பதை ஆச்சார் எப்படி மறுக்கமுடியும். இதை வளர்க்கப் பிரியமில்லை. இத்துடன் ஆச்சார் 4-வியாஸத்தை முடித்துவிட்டார். இனி 5-வது வியாஸத்தைப் பார்ப்போம்.

இங்கு ஆசார் சீர்த்திருத்தக்காரர்களுள் அக்கிராஸனம் வகித்தவராய் முன் சொன்ன வார்த்தைகளையெல்லாம் மறந்து கருணையைப் போக்கவிட்டுக்கொண்டு வாயில் வந்த வார்த்தையெல்லாம் பேசி இத்துடன் தமது வியாஸத்தையும் முடித்துவிட்டார். இதில் முதலில் இதைக்கூறுகின்றார். தேவதாஸிகள் என்று ஒரு வகுப்பினர் முன்காலத்தில் தேவனுக்குத் தொண்டுபுரிந்துகொண்டிருந்தனராம். அவர்களைத்தடியர்கள் கெடுக்க ஆரம்பித்தனராம். பிறகு இவ்விதம் பெண்மணிகளைத் தனிமையாய் நிறுத்தக் கூடாதென்று விவாகம் என்று ஒன்றை ஏற்படுத்தினதாய் இவாது மேதாவிகள் கூறிவிட்டதை இவரும் எடுத்துக்கொண்டனராம். இந்த யுக்திக்கொவ்வாதகதையை நம் ஆச்சார் கூட நம்பினது ஆச்சர்யம். இனிப்புருஷர்கள் அக்கிரமத்தைப் பெண்மணிகள் ஸகிக்கமாட்டார்களாம். அதற்காக அவர்களிச்சைப்படி விடவேண்டுமாம். அவர்களிச்சையோ தெரிந்து விட்டது. புருஷர்கள்போல் எங்களுக்கும் ஸ்வாதந்திரியம் வேண்டும். நாங்களும் உத்தியோகம் பெறுவோம். நீங்கள் பல ஸ்திரீகளை விவாகம் செய்துகொள்வது போல் நாங்களும் செய்துகொள்வோம். இன்னும் பலவாறெல்லாம் கேட்டு ஆட ஆரம்பித்துவிட்டனர். இது யாரிடத்திலிருக்கிறது. யார் கொடுக்கவேண்டும். கொடுக்காவிட்டால் என்ன செய்வார்கள். ஆச்சார் போன்றவர்கள் இந்த ஸ்வாதந்திரியத்திற்கு உத்தரவு கொடுத்து என்ன சுகத்தை அடைவார்களோ, அதையேதான் கொடுக்காதவர்களும் அடையப்போகிறார்கள். ஆகவே சாஸ்திரப்படி ஸ்திரீகளுக்குப் படிப்பே கிடையாதென்று இப்போது முடித்துக்கொள்ளுகிறேன். சுபம் !

M.N. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

# வரருசி.

(112-வது பக்கத்தொடர்ச்சி.)

பிறகு சோகத்துடன் கூடின யோகநந்தன் வியாதியைச் சொன்னதாவது— "தோழனே! பங்க்தியை (पङ्क्ति) பரிசுத்தம் செய்யும் சக்திவாய்ந்தவர்களும் ஸோமயாகஞ்செய்தவர்களுமான ச்ரோத்திரியர்களின் குலத்தில் உதித்த நான் இதே ஜன்மாவில் சூத்திரனானேன், நீடித்திருந்தபோதிலும் இந்த ராஜ்யலக்ஷ்மியால் என் பையன்" என்று. இவ்வாறு சொல்கின்ற அவனை வியாதி சமாதானப்படுத்திக்கொண்டு காலத்திற்கேற்றவாறு கூறியதாவது— சகடாலனால் நீ யார் என்று அறியப்பட்டாய். மிக்கபுத்தி ஸௌக்ஷ்மமுள்ள இவன் முன் நந்தனுடைய பிள்ளையான சந்திரகுப்தனிடம் நீடித்த அன்புள்ளவன். ஒருசமயம் அவன் உன்னை நாசஞ்செய்துவிடுவான். ஆகையால் தவறுதலில்லாமல் சோகத்தை விட்டு வரருசியை முதலாவது மந்திரிஸ்தானத்தில் ஏற்படுத்திக் கொள். நானும் இப்பொழுதே பாடலீபுரம் சென்று குருதக்ஷிணையைக் கொடுப்பதால் வர்ஷோபாத்தியாயரின் இஷ்டத்தைப் பூர்த்திசெய்யப்போகிறேன்— என்று.

அதைச்செவியுற்ற நந்தனால் அவ்வண்ணமே மந்திரிபதவியில் நியமிக்கப்பட்ட வரருசியால் 'சகடாலன் இருக்கும்போது ராஜ்ஜியம் ஸ்திரப்படாது ஆகையால் அவனையொழிப்பதற்கு ஆலோசனை செய்' என்று அறிவிக்கப்பட்ட யோகநந்தன் 'ஜீவனோடிருக்கும்போதே யோகாப்பியாஸத்திலிருந்த பிராம்மணன் இவனால் எரிக்கப்பட்டான்' என்று தோஷத்தை வெளிப்படுத்தி அவனது நூறு புத்திரர்களோடுகூட சகடாலனை பூமியின்உள் அமைக்கப்பட்ட அந்தகூபத்தில் (अन्धकूप) பிரவேசிக்கும்படி செய்தான். நூறு பிள்ளைகளுடன் கூடின அவனது ஜீவனத்திற்கு ஒருசராவம் ஜலமும் ஒருசராவம் ஸக்துவும் அந்த அந்தகூபத்தில் தினந்தோறும் போடப்பட்டது.

இவ்விதம் திடீரென நேர்ந்த ஆபத்தை யோஜிக்கின்ற மந்திரியால் 'பிள்ளைகளே! ஜலத்தோடு சேர்ந்த இந்த ஸக்துரூபமான ஆஹாரம் ஒருவருக்குக்கூட போதாது. ஆகையால் நமக்குள் யோகநந்தனுக்கு பழிக்குப்பழி வாங்கும் சக்திவாய்ந்தவன் எவ

ளை, அவனே இந்த ஆஹாரத்தால் ஜீவித்துவரட்டும்' என்று சொல்லப்படவே அவர்கள் 'தகப்பனாரே! நீர்தான் அவ்விதம் செய்வதற்கு ஸாமர்த்தியமுள்ளவர். நாங்கள் பிழைத்திருந்து பிரயோஜனமில்லை' என்று சொல்லிக்கொண்டு அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே உயிர்களைத் துறந்தனர். "நீர்களுக்கு சத்துருக்களுக்குப் பிரதிகாரஞ்செய்வதே உயிர்களைக்காட்டிலும் மேலானது"

ஸக்துமாநீரால் ஜீவித்துவரும் சகடாலன்

अवुध्वा चित्तमप्राप्य त्रिस्रम्भं प्रभविष्णुषु ।

न स्वेच्छं व्यवहर्तव्यं मात्मनो भूति मिच्छता ॥

'தன்னுடைய ஐச்வர்யத்தை விரும்புகிறவன், பிரபுக்களிடமுள்ள எண்ணத்தையறியாமல் விச்வாஸத்தையும் பெறாமல் தன்னிஷ்டப் படி வியவஹாரஞ்செய்யக்கூடாது' என்று தனது கன்மாவைக் குறித்து துக்கித்துக்கொண்டே கஷ்டப்பட்டு ஜீவித்துவந்தான்.

யோகநந்தனும் சகடாலனுடைய வரலாற்றை மறந்தவனாய் ராஜ்ஜியத்தில் வேரூன்றி வேந்தனுக்குறிய உடை, ஆபரணம், உணவு முதலானவைகளால் ஸத்துவகுணங்கள் நீங்கினவனாய் ரஜோகுணங்கள்மேலிட்டு,இந்திரியங்கள் ஐந்தேயாயினும்அனேக ஆயிரங்கள் உள்ளவைபோல் வளர்கின்ற அவைகளால் துன்புறுத் தப்பட்டவனாய் விஷயபோகங்களையனுபவித்துக்காலந்தள்ளினான். வியாடியோ, குருவுக்கு தக்ஷிணையை ஸமர்ப்பித்து தவஞ்செய் வதற்கு கானகம்போக விருப்பமுள்ளவனாய் யோகநந்தனையடைந்து தனது எண்ணத்தைக்கூறினான். முன்வரலாற்றை நினைத்துக் கொண்ட அரசன் 'மித்திரனே அதிர்ஷ்டத்தால் கிடைத்த இந்த ராஜ்ஜியத்தில் என்னோடுகூடவே இருந்து நீயும் போகங்களையனுபவிக்கலாம்' என்றான். நந்த சரீரத்தில் யோகபலத்தால் புகுந்த இந்திரதத்தனை சிற்றின்பத்தில் ஈடுபட்டு மயங்கியிருப்பதையுணர்ந்து இருபங்கு வைராக்கியம் பெற்ற வியாடி 'இவ்விதங்களான அஸாரங்களில் புத்தியுள்ளவன் எவன்தான் மூழ்குவான்? கானல் நீருக்குச் சமமானலக்ஷ்மியானவள் அறிவாளியை மயங்கச்செய்ய மாட்டாளல்லவா ! என்று அவனுக்கு அறிவித்தும், யானைமுழி யாற்போல் அவனால் பார்க்கப்பட்டு, தபோவனமேகினான்.

மந்திரிப்பதவியை ஏற்றுக்கொண்ட வாருசி காலக்ரமமாக சதுரங்க ஸைன்யத்துடன் கூடினவாய் நந்தராஜனோடு பாடலீபுரத்திற்குத் திரும்பி அங்கு தவத்தால் சந்தோஷமடைந்த கங்காதேவியின் அனுக்கிரஹத்தால், ஏராளமான ஐசுவர்யமடைந்தும் ஆராதிக்காமலேயே பிரஸன்னமான ஸரஸ்வதீதேவியாலேயே, ராஜ்யகாரியங்களின் நடவடிக்கைகள் உபதேசிக்கப்பெற்றும் தாயாராலும் ஆசார்யாளாலும் வெகுமானிக்கப்பட்டும் பதியையே தெய்வமாகக் கருதின தர்மபத்தினியால் பணிவிடை செய்யப்பட்டும் பற்றில்லாமலே இன்பங்களை அனுபவித்துக்கொண்டும் வெகு காலங்கழித்தான்.

மந்திரிகளில் தலைவனான அவனிடத்தில் யோகநந்தன் ராஜ்யபாரத்தை ஒப்பிவித்துவிட்டு ஐசுவரியமதத்தால் கலங்கினமனதுடன் இரவும் பகலும் அந்தப்புரத்திலேயே வசித்துக்கொண்டு சிற்றின்பமில்லாமல் கணநேரங்கூட இருக்க சஹியாமல் தான் மிகவும் மயங்கிக்கிடப்பதை அறியவில்லை. அவ்விதமான அவஸ்தையுள்ள அவனைக்கண்டு வைராக்கியங்கொண்ட வாருசி 'ஆச்சர்யம் வருங்காலத்தைத் தள்ளமுடியாது. சகலகலைகளையும் கசடறக் கற்று பிரதிபாசக்திவாய்ந்து சமாதிகளான எண்குணங்கள் நிறைந்து விளங்கின, இந்திரதத்தன் எங்கே? சிற்றின்பங்களில் ஈடுபட்டு விவேகமிழந்து கஜராஜன்போல் மதங்கொண்ட இந்தயோகநந்தன் எங்கே?

अकाण्ड पातोपनता कं न लक्ष्मी र्विमोहयेत् ।

அகஸ்மாத்தாய் கிடைத்த செல்வம், யாரைத்தான் மோஹிக்கச்செய்யாது. என்பதற்கு முதலாவது திருஷ்டாந்தமாகவே, இவ்வரசன் தடங்கலின்றி சஞ்சரிக்கிறான். அவனது காரியங்களை ஆலோசிப்பதாலேயே என் தர்மம் கெட்டுவிடுகிறது. ஆகையால் அந்த கூபத்தில் போடப்பட்டிருக்கும் அந்த சகடாலனை வெளியில் வரவழைத்து ராஜ்யகாரியங்களை கவனிப்பதற்கு உதவியாகச் செய்கிறேன்' என்று நிச்சயித்து அரசனிடம் அறியப்படுத்தி அந்த புத்திசாலியையே மந்திரிபதவியில் ஏற்படுத்தினான். அந்த சகடாலனும் 'வாருசியிருக்கும்போது யோகநந்தனை வெல்லமுடியாது' என்று கருதி சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டு நீர்கொச்சியின் வியாபாரத்தையடைந்து ராஜ்யகாரியங்களை முன்போல் நடத்தி வந்தான்.

ஒரு சமயத்தில் அரசன் வாருசியோடுகூடகங்கைக்கரையிலுள்ளபூங்தோட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கையில் தற்செயலாக கங்கை வெள்ளத்தின் நடுவில் ஐந்துவிரல்கள் மட்டுந்தெரிகின்ற கையைக் கண்டான். இது என்னவென்று அவனால் கேட்கப்பட மந்திரி இரண்டு விரல்களை அதே திசையில் காண்பித்தான். அக்கணத்திலேயே அந்தக் கை மறையவே மிக்க ஆச்சர்யங்கொண்ட அரசனால் வினவப்பட்ட வாருசி

पञ्चभिर्मिलितैः किं यज्जगतीह न साध्यते ।

ஐந்துபேர்கள் ஒற்றுமையோடிருந்தால் இவ்வுலகில் எந்தக்கார்யந்தான் ஸாதிக்க முடியாதுஎன்று சொன்ன கையின்பொருட்டு

ऐकचित्ये द्वयोरेव किमसाध्यं भवेदिह ।

இவ்வுலகில் ஒரே மனதுடனிருந்தால் இருவரால் சாதிக்கமுடியாத காரியம் என்ன உண்டு என்று என்னால் இரண்டுவிரல்கள் காட்டப்பட்டன என்று ரகஸ்யஞானத்தை அறிவித்தான். சகடாலன் அவனது உவமையற்ற புத்தித்திறமையைக்கண்டு வருத்தங்கொள்ளலானான்.

ஒரு சமயத்தில் இரவில் நகரங்களைப்பரிசோதிக்க நியமிக்கப்பட்ட ராஜபுருஷன் ஒவ்வொருவனும் நடுஇரவில் சஞ்சரித்துக்கொண்டு வருகையில் நாசத்தையடைந்து வருவதைச் செவியுற்ற நந்தன் வாருசியையே அக்கார்யத்தைப் பார்ப்பதில் ஏவினான், அவனும் நடு இரவில் அலைந்துகொண்டிருக்கையில் ஒரு அரக்கனை கண்டான். கண்டு உனக்கு என்ன விருப்பம்? என்றுகேட்டான் அவனோ வாருசியைப்பார்த்து இந்நகரில் அழகுள்ளபெண் யார்? சொல் என்று வினவினான். அவனாலும் சிரித்துக்கொண்டு,

या यस्याभिमता मूर्खसुरूपा तस्य सा भवेत् ।

மூர்க்கனே! எவனுக்கு எவளிடத்தில் அபிமானமேற்படுகிறதோ அவளே அவனுக்கு அழகுள்ளவளாகிறாள்' என்று பதிலுரைத்தான். ஸந்தோஷங்கொண்ட அவ்வரக்கன் 'உன்னால் வெல்லப்பட்டேன்' இதுமுதற்கொண்டு தோழனான நீ நினைத்தமாத்திரத்தில் உனதுஸமீபம் வருவேன்' என்றுசொல்லிவிட்டு மறைந்தான்.

(தொடரும்)

K. V. சுப்பிரமணியசாஸ்திரி